fJudicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 109/2022**

வழக்கு சாட்சி எண். **PW1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமுருகன் | கிராமம் | : | அம்பாலப்பட்டி |
| தந்தை பெயர் | : | முத்துசாமி | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 37 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரிஆஜர்).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 7**th** Day of **May 2026.**

**முதல் விசாரணை**

நான் அம்பாலப்பட்டியில் குடியிருந்துகொண்டு கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எங்கள் ஊரைச்சேர்ந்தவர்.

கடந்த 29.10.2021ம் தேதி இரவு சுமார் 7 மணியளவில் பசவபுரம் கிராமத்தில் என் தந்தை மாட்டுக்கொட்டகையில் மாடுகளை பார்த்துக்கொண்டு சாலையின் ஓரமாக சென்றபோது பேருந்து நிறுத்தத்தில் நிழற்கூடம் அருகே நடந்து சென்றபோது ஆஜர் எதிரி இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்து எனது தந்தையின் மீது மோதி விபத்து ஏற்படுத்திவிட்டதாக அருகில் இருந்த நபர்கள் எனக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தார்கள். நான் உடனே சம்பவயிடத்திற்கு சென்று பார்த்து அடிப்பட்ட எனது

தந்தையை அரூர் அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் எடுத்துச்சென்றேன். என் தந்தைக்கு பின்பக்க தலை, இடுப்பு, 2 கால்களிலும் பலத்த இரத்தகாயம் ஏற்பட்டிருந்தது.

மேல் சிகிசிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றேன். அங்கு சிகிச்சையில் இருந்த எனது தந்தை அன்று இரவு 12.50 மணியளவில் இறந்துவிட்டார். பின்னர் விபத்து குறித்து நடவடிக்கை எடுக்கவேண்டி நான் மொரப்பூர் காவல் நிலைய போலீசாரிடம் புகார் அளித்தேன்.

இன்று என்னிடம் காட்டப்படும் புகார் நான் அளித்ததுதான். **புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி எங்கள் ஊரைச்சேர்ந்த்வர் என்பதால் அவரை எனக்கு தெரியும். விபத்து பற்றி முருகன் என்பவர் போன் செய்து எனக்கு சொன்னார். முருகனுக்கு விபத்து குறித்து யார் தகவல் தெரிவித்தார்கள் என்று எனக்கு தெரியாது. விபத்து நடநத் இடம் மெயின்ரோடு என்றால் சரிதான், அங்கு மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இடம் என்றால் சரிதான். மாட்டுக்கொட்டாய் அருகில் சம்பத் என்பவரின் வீடு உள்ளது என்றால் சரிதான். நான் சொன்னவாறு சம்பவம் நடந்திருந்தால் அந்த வீட்டில் உள்ளவர்கள் சம்பவத்தை பார்த்திருப்பார்கள் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் அருகில் இருந்த சம்பத் வீட்டில் உள்ளவர்கள் விபத்தை பார்த்திருப்பார்கள் என்ற விபரம் பற்றி நான் சொல்லவில்லை. விபத்து நடந்தததாக மட்டும்தான் முருகன் சொன்னார் . 30.10.2021ம் தேதி காலை 9 மணியளவில் நான் புகார் அளித்தேன். புகாரை யார் எழுதினார்கள் என்றால் என் சித்தி மகன் ராஜேந்திரன்

என்பவர் எழுதினார். மேற்படி புகாரில் விபத்து சம்வத்தை இன்னார் பார்த்தார் என்று பெயர் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. புகாரை மொரப்பூர் காவல் நிலையத்தில் வைத்து எழுதினோம். புகாரை நான் சொல்ல சொல்ல ராஜேந்திரன் என்பவர் எழுதினார். விபத்தில் இறந்தவர் என் தந்தை என்பதாலும் நான் சொன்னவாறு விபத்து நடக்கவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**